ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 3.2 – அஞ்சனவண்ணனை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.2 – அஞ்சனவண்ணனை

‡ அஞ்சன வண்ணனை ⋆
ஆயர் கோலக் கொழுந்தினை ⋆
மஞ்சனம் ஆட்டி ⋆
மனைகள் தோறும் திரியாமே ⋆
கஞ்சனைக் காய்ந்த ⋆
கழல் அடி நோவக் கன்றின் பின் ⋆
என் செயப் பிள்ளையைப் போக்கினேன் ⋆
எல்லே பாவமே ! ‖ **3.2.1** ‖

பற்று மஞ்சள் பூசிப் ⋆
பாவை மாரொடு பாடியில் ⋆
சிற்றில் சிதைத்தெங்கும் ⋆
தீமை செய்து திரியாமே ⋆
கற்றுத் தூளி உடை ⋆
வேடர் கானிடைக் கன்றின் பின் ⋆
எற்றுக்கென் பிள்ளையைப் போக்கினேன் ⋆
எல்லே பாவமே ! ‖ **3.2.2** ‖

நன் மணி மேகலை ⋆
நங்கைமாரொடு நாள் தொறும் ⋆
பொன்மணி மேனி ⋆
புழுதி ஆடித் திரியாமே ⋆
கன்மணி நின்றதிர் ⋆

கான் அதர் இடைக் கன்றின் பின் ⋆
என் மணிவண்ணனைப் போக்கினேன் ⋆
எல்லே பாவமே ! ‖ **3.2.3** ‖

வண்ணக் கருங்குழல் ⋆
மாதர் வந்தலர் தூற்றிடப் ⋆
பண்ணிப் பல செய்து ⋆
இப் பாடி எங்கும் திரியாமே ⋆
கண்ணுக்கினியானைக் ⋆
கான் அதர் இடைக் கன்றின் பின் ⋆
எண்ணற்கரியானைப் போக்கினேன் ⋆
எல்லே பாவமே ! ‖ **3.2.4** ‖

அவ்வவ்விடம் புக்கு ⋆
அவ்வாயர் பெண்டிர்க்கணுக்கனாய்க் ⋆
கொவ்வைக் கனிவாய் கொடுத்துக் ⋆
கூழைமை செய்யாமே ⋆
எவ்வும் சிலை உடை ⋆
வேடர் கானிடைக் கன்றின் பின் ⋆
தெய்வத் தலைவனைப் போக்கினேன் ⋆
எல்லே பாவமே ! ‖ **3.2.5** ‖

மிடறு மெழும் எழுத்தோட ⋆
வெண்ணெய் விழுங்கிப் போய் ⋆
படிறு பல செய்து ⋆
இப்பாடி எங்கும் திரியாமே ⋆
கடிறு பல திரி ⋆
கான் அதர் இடைக் கன்றின் பின் ⋆

இடற என் பிள்ளையைப் போக்கினேன் ⋆
எல்லே பாவமே ! ‖ **3.2.6** ‖

வள்ளி நுடங்கிடை ⋆
மாதர் வந்தலர் தூற்றிட ⋆
துள்ளி விளையாடித் ⋆
தோழரோடு திரியாமே ⋆
கள்ளி உணங்கு ⋆
வெங்கான் அதர் இடைக் கன்றின் பின் ⋆
புள்ளின் தலைவனைப் போக்கினேன் ⋆
எல்லே பாவமே ! ‖ **3.2.7** ‖

பன்னிரு திங்கள் ⋆
வயிற்றில் கொண்ட அப் பாங்கினால் ⋆
என் இளங்கொங்கை ⋆
அமுதம் ஊட்டி எடுத்து யான் ⋆
பொன்னடி நோவப் ⋆
புலரியே கானில் கன்றின் பின் ⋆
என் இளஞ்சிங்கத்தைப் போக்கினேன் ⋆
எல்லே பாவமே ! ‖ **3.2.8** ‖

குடையும் செருப்பும் கொடாதே ⋆
தாமோதரனை நான் ⋆
உடையும் கடியன ⋆
ஊன்று வெம் பரற்கள் உடை ⋆
கடிய வெங்கானிடைக் ⋆
கால் அடி நோவக் கன்றின் பின் ⋆

கொடியேன் என் பிள்ளையைப் போக்கினேன் ⋆
எல்லே பாவமே ! ॥ **3.2.9** ॥

‡ என்றும் எனக்கினியானை ⋆
என் மணிவண்ணனைக் ⋆
கன்றின் பின் போக்கினேன் என்று ⋆
அசோதை கழறிய ⋆
பொன் திகழ் மாடப் ⋆
புதுவையர் கோன் பட்டன் சொல் ⋆
இன் தமிழ் மாலைகள் வல்லவர்க்கு ⋆
இடர் இல்லையே ॥ **3.2.10** ॥

அடிவரவு — அஞ்சனம் பற்று நன்மணி வண்ணம் அவ்வவ்விடம் மிடறு வள்ளி பன்னிரு குடையும் என்றும் சீலை

அஞ்சனவண்ணனை முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்